தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 18.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-12119/SCIC/2019**

திரு ச. மகாலிங்கம் .. மேல்முறையீட்டாளர்
7/83, செட்டித் தெரு,
சுந்தரபெருமாள் கோயில் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் 614 208

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
கும்பகோணம்
தஞ்சாவூர்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 29.10.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில் பொதுத் தகவல் அலுவலர், கும்பகோணம் அவர்களால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட கடித எண்.59/2018, ஆ3 நாள்13.05.2018ஐ குறிப்பிட்டு அது குறித்து 7 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார்.

2. இதன் பின்னர் மனுதாரர் பிரிவு 19(1)-ன்கீழ் 17.11.2019-ல் தமது முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 29.11.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 21.07.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 27.07.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

4. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் 24.07.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் எழுப்பிய கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கடிதத்தனை ஆணையத்திற்கு சமர்பித்துள்ளார். மனுதாரரும் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களில். தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்துள்ளார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-12119/SCIC/2019</u>**
<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்,
கும்பகோணம்
தஞ்சாவூர்.

<u>மனுதாரர்</u>
திரு ச. மகாலிங்கம்
7/83, செட்டித் தெரு,
சுந்தரபெருமாள் கோயில் அஞ்சல்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் 614 208

JJ/PA 18/11/2020